செ.வெ.எண்: 39 நாள்: 20.07.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் ரூ.93.84 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (20.07.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், வேட்டனூர் ஊராட்சி, வேட்டனூரில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.22.39 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட நாற்றங்கால் பணியையும்,தமிழ்நாடு கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.21.60 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட தார்சாலை பணியையும், பலவரசன் ஊராட்சி, உதயமாணிக்கம் கிராமத்தில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கிராம சேவை மையம் கட்டிட கட்டுமானப்பணியையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.



மேலும் பெருநாவலூர் ஊராட்சி, பரமந்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மாவட்ட ஊராட்சி நிதியின் கீழ் ரூ.2.90 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சுற்றுச்சுவர் கட்டுமானப்பணியையும், திருப்பெருந்துறை ஊராட்சி, திருப்பெருந்துறை ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.29.95 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட வட்டார ஊராட்சி சேவை மைய கட்டிட கட்டுமானப்பணி மற்றும் இக்கட்டிடத்தில் உள்ளாட்சி தேர்தலில் பயன்படுத்துவதற்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள வாக்குப்பெட்டி அறை, மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் நட்டு வளர்த்து பராமரிக்கும் பணியையும் என மொத்தம் ரூ.93.84 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது நாற்றங்கால்களில் மரக்கன்றுகளை உரிய முறையில் நடவு செய்து பராமரித்து வளர்க்கவும், கருவேலமரங்களை முற்றிலுமாக அழிக்கவும், உள்ளாட்சி தேர்தல் தொடர்பான பல்வேறு பணிகளை விரைவாக மேற்கொள்ளவும், முடிவுற்ற பணிகளை உரிய முறையில் பராமரிக்கவும், மேலும் நடைபெறும் பணிகளை தரமான கட்டுமானப்பொருட்களை கொண்டு விரைவாக கட்டிமுடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் அலுவலகத்தில் அரசு பொது இ.சேவை மையம், ஆதார் அட்டை எடுக்கும் பணி, பட்டா மாறுதல் பதிவேடு (நத்தம் மற்றும் எஸ்.டி.ஆர்) உட்பிரிவு இல்லாதவை, பணியாளர் பதிவேடு, இணையவழி பட்டாமாறுதல் பதிவேடு, முதியோர் உதவித்தொகை பதிவேடு, வழக்கு கோப்பு பதிவேடு, விபத்து நிவாரண மனு பதிவேடு, ஆதரவற்ற விதவைச்சான்று பதிவேடு, தபால்பதிவேடு, பகிர்மானப்பதிவேடு, முதலமைச்சர் தனிப்பிரிவு புகார்மனு பதிவேடு, புதிய குடும்ப அட்டை வழங்கும் பதிவேடு, ஆன்லைன் பட்டா மாறுதல் பதிவேடு, புதிய குடும்ப அட்டை வழங்கும் பதிவேடு போன்ற பல்வேறு பதிவேடுகள் மற்றும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.செல்வராஜ், திரு.பாஷியம், வட்டாட்சியர் திரு.பழனிச்சாமி, உதவிப்பொறியாளர் திரு.சுந்தர், ஒன்றியக்குழு உறுப்பினர் திரு.நரேந்திரஜோதி, ஊராட்சி மன்றத்தலைவர் திரு.சுப்பிரமணியன், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:  செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**